05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# மலேசிய இளையோர் சிறுகதைகளில் மெய்ப்பாட்டுக் கூறுகள்

# ASPEK *MEYPPĀṬU* DALAM CERPEN REMAJA TAMIL MALAYSIA


**புஷ்பவள்ளி சத்திவேல்**

**PUSPAVALLI SATHIVAL**


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**TESIS DIKEMUKAKAN BAGI MEMENUHI SYARAT UNTUK MEMPEROLEH IJAZAH SARJANA SASTERA (KESUSASTERAAN TAMIL) MOD PENYELIDIKAN**


**FAKULTI BAHASA DAN KOMUNIKASI**

**UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS**


**2017**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# ஆய்வுச்சாரம்

இந்த ஆய்வு மலேசிய இளையோர் சிறுகதைகளில் காணப்படும் மெய்ப்பாட்டுக் கூறுகளை அடையாளங்காண்பதுடன் அதன் மெய்ப்பாட்டு உணர்வுகளுக்கான நிலைக்களன்களும் தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாட்டு நிலைக்களன்களும் கொண்டிருக்கும் ஒற்றுமையையும் வேற்றுமையையும் ஆராயும் நோக்கத்தைக் கொண்டிருக்கிறது. தொல்காப்பியரின் மெய்ப்பாட்டியல் கோட்பாட்டினை ஆதாரமாகக் கொண்டு பனுவல் ஆய்வு அணுகுமுறையும் நூலக ஆய்வு அணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. 2000ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டுவரை மலேசியாவில் வெளிவந்த முப்பது இளையோர் சிறுகதைகள் ஆய்வுப் பொருளாகக் கொள்ளப்பட்டன. ஆய்வின் முடிவாக, தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை ஆகிய அனைத்து எண்வகை மெய்ப்பாடுகளும் மலேசிய இளையோர் சிறுகதைகளில் இடம்பெற்றுள்ளதை அறிய முடிந்தது. மேலும், மலேசிய இளையோர் சிறுகதைகளில் வெளிப்படும் பெரும்பாலான மெய்ப்பாட்டு உணர்வு நிலைக்களன்கள் தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாட்டு நிலைக்களன்களோடு ஒற்றுமையைக் கொண்டிருப்பது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், காலச் சூழ்நிலைக்கேற்ப சில நிலைக்களன்கள் பொருந்தி வராத நிலையை அறிய முடிந்தது. அதே சமயத்தில் தொல்காப்பியர் வகுத்துள்ள நிலைக்களன்களுக்கு முற்றிலும் மாறுபட்ட சில புதிய நிலைக்களன்களைக் கொண்டும் மலேசிய இளையோர் சிறுகதைகள் அமைந்துள்ளது புலனாகியது. ஆகவே, மலேசிய இளையோர் சிறுகதைகளில் இளையோரின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள தொல்காப்பியரின் எண்வகை மெய்ப்பாட்டுக் கூறுகள் பெரிதும் துணைபுரிகின்றன என நிரூபணமாகியுள்ளது. தொடர் ஆய்வினை மேற்கொள்ளவும் இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டு இளையோரின் உளவியலை ஆராய்ந்து புரிந்து கொள்ளவும் மெய்ப்பாட்டியல் கூறுகளைப் பயன்படுத்திக் கொள்ளலாமென இவ்வாய்வின் பயனாகக் குறிப்பிடலாம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# ASPEK *MEYPPĀṬU* DALAM CERPEN REMAJA TAMIL MALAYSIA

## ABSTRAK

Kajian ini bertujuan mengenal pasti aspek *Meyppātu* dalam cerpen remaja Tamil Malaysia dan meninjau ciri persamaan dan perbezaan antara situasi *Meyppātu* seperti yang dikarang oleh Tolkāppiyar. Kajian ini menggunakan kaedah analisis teks dan kajian kepustakaan berdasarkan teori *Meyppāṭṭiyal* yang diutarakan oleh Tolkāppiyar dalam bukunya *Tholkāppiyam*. Tiga puluh buah cerpen remaja Tamil Malaysia yang diterbitkan antara tahun 2000 hingga 2014 telah digunakan sebagai sumber kajian. Dapatan daripada kajian ini menunjukkan bahawa cerpen remaja Tamil Malaysia mempunyai lapan aspek *Meyppātu* iaitu *nakai*, *aḻukai*, *ilivaral*, *maruṭkai*, *accam*, *perumitam*, *vekuḷi* dan *makiḻcci*. Dapatan kajian juga menunjukkan bahawa kebanyakan situasi *Meyppātu* dalam cerpen remaja Tamil Malaysia mempunyai persamaan dengan situasi *Meyppātu* yang dinyatakan oleh Tolkāppiyar. Dapatan kajian juga menunjukkan peredaran zaman menyebabkan beberapa situasi *Meyppātu* yang diketengahkan oleh Tolkāppiyar kurang relevan dan tidak sependapat dengan situasi cerpen remaja Tamil Malaysia. Kajian mendapati beberapa situasi *Meyppātu* yang baharu dalam cerpen ini. Kesimpulannya, kajian ini membuktikan aspek *Meyppātu* dapat menampakkan naluri perasaan remaja dalam cerpen remaja Tamil Malaysia. Implikasi kajian ini menunjukkan aspek *Meyppātu* dapat digunakan dalam kajian lanjutan dan membantu memahami psikologi remaja abad ke-21.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# *MEYPPĀṬU* ASPECTS IN THE MALAYSIAN TAMIL ADOLESCENT SHORT STORIES

## ABSTRACT

The aim of this research are to identify *Meyppāṭu* aspects in Malaysian Tamil adolescent short stories and to look for the similarities and the differences between *Meyppāṭu* situations as being authored by Tolkāppiyar. The research is based on text content analysis and library research on *Meyppāṭṭiyal* theory stressed by Tolkāppiyar in his book *Tolkāppiyam*. Thirty Malaysian Tamil adolescent short stories have been used, which were published during the year 2000 to 2014 as the source for the research. The findings from this research showed that the Malaysian Tamil adolescent short stories comprise eight *Meyppāṭu* aspects which are *nakai*, *aḻukai*, *ilivaral*, *maruṭkai*, *accam*, *perumitam*, *vekuḷi* and *makiḻcci*. The findings further showed that many *Meyppāṭu* situations in Malaysian Tamil adolescent short stories have similarities with those *Meyppāṭu* situations stressed by Tolkāppiyar. The research findings also showed that with the progress of time, some of the *Meyppāṭu* situations highlighted by Tolkāppiyar are relatively less relevant and do not agree with the situations in Malaysian Tamil adolescent short stories. In addition, a few of the new *Meyppāṭu* situations are found in these short stories. In sum, the research has proved that *Meyppāṭu* aspects can reveal the feelings of adolescent in Malaysian Tamil short stories. The implications of the research showed that *Meyppāṭu* aspects can be used for future research and help to understand the 21st century adolescents' psychology.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| **ஒப்புதல்** | ii |
| **நன்றியுரை** | iii |
| **ஆய்வுச் சாரம்** | iv |
| **பொருளடக்கம்** | vii |
| **அட்டவணை பட்டியல்** | xiv |
| **குறிவரைவு பட்டியல்** | xv |
| **இயல் 1 அறிமுகம்** | |
| 1.1 முன்னுரை | 1 |
| 1.2 ஆய்வுப் பின்னணி | 4 |
| 1.3 ஆய்வுச் சிக்கல் | 9 |
| 1.4 ஆய்வு நோக்கம் | 11 |
| 1.5 ஆய்வு வினா | 12 |
| 1.6 ஆய்வின் முக்கியத்துவம் | 12 |
| 1.7 ஆய்வு எல்லை | 14 |
| 1.8 ஆய்வின் சான்றாதாரங்கள் | 15 |
| 1.8.1 முதன்மைச் சான்றாதாரம் | 15 |
| 1.8.2 துணைமைச் சான்றாதாரம் | 15 |

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



1.9 கலைச்சொல் விளக்கம் 16

1.9.1 இளையோர் சிறுகதை 16

1.9.2 மெய்ப்பாடு 17

1.10 தொகுப்புரை 18

**இயல் 2 முந்தைய ஆய்வுகள்**

2.1 முன்னுரை 19

2.2 முந்தைய ஆய்வுகள் 20

2.3 ஆய்வுக் கட்டுரைகள் 35

2.4 ஆய்வுக்குத் தொடர்புடைய நூல்கள் 38

2.5 தொகுப்புரை 41

**இயல் 3 ஆய்வு நெறிமுறை**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3.1 முன்னுரை 43

3.2 ஆய்வு வடிவமைப்பு 45

3.3 ஆய்வு அணுகுமுறை 47

3.3.1 நூலக ஆய்வு அணுகுமுறை 47

3.3.2 பனுவல் ஆய்வு அணுகுமுறை 48

3.4 தரவு சேகரிப்பு முறை 49

3.5 தரவு பகுப்பாய்வு முறை 49

3.6 ஆய்வுக் கோட்பாடு 50


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**இயல் 4 ஆய்வு முடிவுகள்**


4.1 முன்னுரை 61

4.2 மலேசிய இளையோர் சிறுகதைகளில் மெய்ப்பாடும் அதன் நிலைக்களன்களும். 62

4.2.1 நகை 62

4.2.1.1 எள்ளல் 66

4.2.1.2 இளமை 73

4.2.1.3 பேதைமை 74

4.2.1.4 மடம் 76

4.2.2 அழுகை 77

4.2.2.1 இளிவு 81


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


4.2.2.2 இழவு 86

4.2.2.3 அசைவு 89

4.2.2.4 வறுமை 96

4.2.3 இளிவரல் 99

4.2.3.1 மூப்பு 104

4.2.3.2 பிணி 104

4.2.3.3 வருத்தம் 106

4.2.3.4 மென்மை 123

4.2.4 மருட்கை 131

4.2.4.1 புதுமை 134

4.2.4.2 பெருமை 142


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



4.2.4.3 சிறுமை 143

4.2.4.4 ஆக்கம் 144

4.2.5 அச்சம் 146

4.2.5.1 அணங்கு, விலங்கு, கள்வர் 150

4.2.5.2 இறை 150

4.2.6 பெருமிதம் 155

4.2.6.1 கல்வி 158

4.2.6.2 தறுகண் 160

4.2.6.3 இசைமை 161

4.2.6.4 கொடை 162

4.2.7 வெகுளி 164

4.2.7.1 உறுப்பறை 168

4.2.7.2 குடிகோள் 168

4.2.7.3 அலை 170

4.2.7.4 கொலை 172

4.2.8 உவகை 176

4.2.8.1 செல்வம் 180

4.2.8.2 புலன் 181

4.2.8.3 புணர்வு 189

4.2.8.4 விளையாட்டு 189

4.3 மலேசிய இளையோர் சிறுகதைகளில் தொல்காப்பியரின் மெய்ப்பாடுகளோடு மாறுபட்டிருக்கும் நிலைக்களன்கள் 191

4.3.1 நகை 191


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


4.3.1.1 முகமன் நகை 191

4.3.2 அழுகை 192

4.3.2.1 ஆனந்தத்தால் வரும் நகை 192

4.3.3 அச்சம் 193

4.3.3.1 தேர்வை எழுதுவதில் அச்சம் 193

4.3.3.2 காதல் உறவில் அச்சம் 194

4.3.3.3 எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய அச்சம் 197

4.3.3.4 விளையாட்டுத் தொடர்பான அச்சம் 198

4.3.3.5 அன்பானவர்களை இழப்பதில் அச்சம் 199

4.3.3.6 பிறரது துன்பங்களைக் கண்டு அச்சம் 199

4.3.4 பெருமிதம் 200

4.3.4.1 நட்பினால் பெருமிதம் 200

4.3.4.2 உடைமையினால் பெருமிதம் 201

4.3.5 வெகுளி 202

4.3.5.1 எதிர்ப்பார்ப்பு பூர்த்தியாகாததால் வெகுளி 202

4.3.5.2 விருப்பமின்மையால் ஏற்படும் வெகுளி 205

4.3.5.3 சமூகநிலையில் திருப்தியின்மையால் ஏற்படும் வெகுளி 206

4.4 தொகுப்புரை 207

**இயல் 5 ஆய்வுக் கருத்தாடல்களும் முடிவுகளும்** 208

5.1 முன்னுரை 208

5.2 ஆய்வுச் சுருக்கம் 208

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


5.3 கண்டுப்பிடிப்புகளின் கருத்தாடல் 210

5.3.1 மலேசிய இளையோர் சிறுகதைகளில் எண்வகை மெய்ப்பாடுகளும் அதன் நிலைக்களன்களும் 210

5.3.1.1 நகை மெய்ப்பாடும் அதன் நிலைக்களன்களும் 211

5.3.1.2 அழுகை மெய்ப்பாடும் அதன் நிலைக்களன்களும் 212

5.3.1.3 இளிவரல் மெய்ப்பாடும் அதன் நிலைக்களன்களும் 214

5.3.1.4 மருட்கை மெய்ப்பாடும் அதன் நிலைக்களன்களும் 215

5.3.1.5 அச்சம் மெய்ப்பாடும் அதன் நிலைக்களன்களும் 216

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

5.3.1.6 பெருமிதம் மெய்ப்பாடும் அதன் நிலைக்களன்களும் 217

5.3.1.7 வெகுளி மெய்ப்பாடும் அதன் நிலைக்களன்களும் 218

5.3.1.8 உவகை மெய்ப்பாடும் அதன் நிலைக்களன்களும் 220

5.3.2 தொல்காப்பியர் வகுத்துள்ள மெய்ப்பாடு நிலைக் களன்களோடு மாறுபட்டுள்ள மலேசிய இளையோர் சிறுகதைகள். 222

5.3.2.1 மாறுபட்டுள்ள நகை நிலைக்களன் 222

5.3.2.2 மாறுபட்டுள்ள அழுகை நிலைக்களன் 222

5.3.2.3 மாறுபட்டுள்ள அச்சம் நிலைக்களன் 223

5.3.2.4 மாறுபட்டுள்ள பெருமிதம் நிலைக்களன் 224

5.3.2.5 மாறுபட்டுள்ள வெகுளி நிலைக்களன் 225

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


5.4 ஒட்டுமொத்த ஆய்வு முடிவுகள் 226

5.5 தொடர் ஆய்வுக்கான பரிந்துரைகள் 227

5.6 முடிவுரை 229

**துணைநூற்பட்டியல்** 230

**பின்னிணைப்பு** 235

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## அட்டவணை பட்டியல்


| அட்டவணை எண் | | பக்கம் |
|---|---|---|
| 3.1 | எண்வகை மெய்ப்பாட்டு நிலைக்களன்கள் | 53 |
| 4.1 | மலேசிய இளையோர் சிறுகதைகளில் நகை மெய்ப்பாடு | 64 |
| 4.2 | மலேசிய இளையோர் சிறுகதைகளில் நகை மெய்ப்பாட்டு நிலைக்களன்கள் | 66 |
| 4.3 | மலேசிய இளையோர் சிறுகதைகளில் அழுகை மெய்ப்பாடு | 78 |
| 4.4 | மலேசிய இளையோர் சிறுகதைகளில் அழுகை மெய்ப்பாட்டு நிலைக்களன்கள் | 80 |
| 4.5 | மலேசிய இளையோர் சிறுகதைகளில் இளிவரல் மெய்ப்பாடு | 101 |
| 4.6 | மலேசிய இளையோர் சிறுகதைகளில் இளிவரல் மெய்ப்பாட்டு நிலைக்களன்கள் | 103 |
| 4.7 | மலேசிய இளையோர் சிறுகதைகளில் மருட்கை மெய்ப்பாடு | 132 |
| 4.8 | மலேசிய இளையோர் சிறுகதைகளில் மருட்கை மெய்ப்பாட்டு நிலைக்களன்கள் | 134 |
| 4.9 | மலேசிய இளையோர் சிறுகதைகளில் அச்சம் மெய்ப்பாடு | 147 |
| 4.10 | மலேசிய இளையோர் சிறுகதைகளில் அச்சம் மெய்ப்பாட்டு நிலைக்களன்கள் | 149 |
| 4.11 | மலேசிய இளையோர் சிறுகதைகளில் பெருமிதம் மெய்ப்பாடு | 156 |
| 4.12 | மலேசிய இளையோர் சிறுகதைகளில் பெருமிதம் மெய்ப்பாட்டு நிலைக்களன்கள் | 158 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


4.13 மலேசிய இளையோர் சிறுகதைகளில் வெகுளி மெய்ப்பாடு 165

4.14 மலேசிய இளையோர் சிறுகதைகளில் வெகுளி மெய்ப்பாட்டு நிலைக்களன்கள் 167

4.15 மலேசிய இளையோர் சிறுகதைகளில் உவகை மெய்ப்பாடு 177

4.16 மலேசிய இளையோர் சிறுகதைகளில் உவகை மெய்ப்பாட்டு நிலைக்களன்கள் 179

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## குறிவரைவு பட்டியல்

**குறிவரைவு எண்** **பக்கம்**


| | | |
|---|---|---|
| 3.1 | ஆய்வுக் கட்டமைப்பு | 46 |
| 3.2 | கோட்பாட்டுக் கட்டமைப்பு | 59 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# இயல் 1

# அறிமுகம்

## 1.1 முன்னுரை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மனித வாழ்க்கையானது இன்பம், துன்பம் என்ற இரு வேறு கூறுகளோடு, உணர்ச்சி மோதல்கள், சிந்தனைக் குழப்பங்கள், பல்வேறு போராட்டங்கள் ஆகியனவற்றைக் கொண்ட ஒரு கலவையே ஆகும். இத்தகு வாழ்க்கையையே விழுமிய மொழியின் வாயிலாக ஆசிரியர்கள் இலக்கியமாகப் படைக்கின்றனர். இலக்கியத்தின் தன்மைகளைப் பல இலக்கியத் திறனாய்வாளர்கள் நன்கு விளக்கியுள்ளனர். எஸ்.வையாபுரிபிள்ளை (1947) "இலக்கியம் உண்மையும் அழகும் நிரம்பிய சொற்களால் வாழ்க்கையைப் புலப்படுத்துகின்றது; அது மனிதனது ஆன்மாவையும், அவன் கருத்துகள், உணர்ச்சிகள், தலைநோக்கங்கள்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


முதலியவற்றையும் சொற்கள் வடிவிலே காட்டும் குறிப்பாகும்" எனத் தெளிவுறுத்துகிறார்.

இன்றைய படைப்பிலக்கியங்களின் கரு மனித வாழ்விலிருந்தே உருவாகிறது. அவ்வகையில் மனிதர்களின் அனுபவங்களும், எண்ணங்களும் சிறப்பாக, சுதந்திரமாக வெளிப்படும் பொழுது படைப்பிலக்கியங்கள் தோன்றுகின்றன (வரதராசன்,1960,p.160). இவ்விலக்கியங்கள் சிறுகதை, நாவல், நாடகம், கவிதை என்று பல்வேறு வடிவங்களைக் கொண்டு விரிவாக்கம் காண்கின்றன. இவற்றுள் சிறுகதை என்பது சுருக்கமாகக் கதைகூறும் புனைவகை உரைநடை இலக்கியமாகத் திகழ்கிறது. சிறுகதை பார்வைக்கு எளிய கலைபோல் இருந்தாலும் உண்மையில் அது மிக அரியதொரு கலையாக விளங்குகிறது. ஏனெனில், ஒரேவொரு நிகழ்ச்சியோ அந்த நிகழ்ச்சியை ஒட்டி எழுகின்ற மன நிலைகளோ ஓர் அற்புதமான சிறுகதையைப் படைத்து விடும் ஆற்றலைக் கொண்டிருக்கின்றன. இதனையே இரா.தண்டாயுதம் (1972) கூறுகையில், "எடுப்பான ஒரு தொடக்கம், மிடுக்கான ஓட்டம், மனத்திற்குள் நிற்கும் முடிவு ஆகியவை நல்ல சிறுகதைக்கு அங்கங்களாக விளங்கி வந்திருக்கின்றன. முழுமையும் ஒருமை அழுத்தமும் சிறுகதைக்கு முதன்மையாக இருக்க வேண்டிய பண்புகளாகும்" என விளக்குகிறார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

படைப்பாளர்கள் சிறுகதையின் மூலம் நமக்கு நேரடியாகக் காட்டுவதும் சொல்வதும் சிறிதுதான் என்றாலும் படிப்பவர்கள் உணர்வது மிக அதிகம் என்பது அதன் சிறப்பாகக் காட்டுகின்றது. இத்தகைய சிறுகதைகளை மு.வரதராசன்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


(1960), கருவின் சிறப்பால் அமையும் சிறுகதை, ஒருவரின் பண்பின் சிறப்பால் அமையும் சிறுகதை, உள்ளத்தில் பதியும் உணர்வின் சிறப்பால் அமையும் சிறுகதை என மூவகையாகப் பகுத்தாராய்ந்து கூறுகிறார். அவ்வகையில், சிறுகதைகள் வெறும் பொழுது போக்கிற்கு மட்டும் உரியவனவாக அல்லாமல் வாழ்க்கைப் போராட்டங்களால் ஏற்படும் உள்ளத்து உணர்ச்சிகளையும் உயரிய நோக்கத்தையும் கொண்டிருப்பதால் தனிப்பெரும் படைப்பிலக்கியமாகச் சிறக்கின்றன.

ஆய்வாளர் இளையோர் சிறுகதைகளை ஆய்வுக்களமாகக் கொண்டிருக்கிறார். சிறுகதைகள் தமிழ்மொழிக்குப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் அறிமுகமாகி இருந்தாலும் இளையோர் சிறுகதைகள் புதிய வரவாகவே காணப்படுகின்றன. இளையோர் சிறுகதைகள் இளையோரை மையமாகக் கொண்டு எழுதப்படுபவை. இளைய தலைமுறையினரின் வாழ்க்கை முறையை இலக்கியத்தின் வாயிலாக நெறிப்படும் ஒரு முயற்சியாக மலேசியக் கல்விக் கழகங்களில் ‘இளையோர் சிறுகதைகள்’ பாடத்திட்டத்தின் ஒரு கூறாக மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறது (ராசன், 2013).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மலேசியச் சிறுகதை எழுத்தாளர்களால் எழுதப்பட்ட முப்பது இளையோர் சிறுகதைகளைக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொல்காப்பியர் வகுத்தளித்த மெய்ப்பாட்டியல் கூறுகளை ஆய்வுக் கோட்பாடாகக் கொண்டு இச்சிறுகதைகள் ஆராயப்பட்டுள்ளன. 2000–2014 வரையில் எழுத்தாளர் கமலா,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பாவை, இளம்பூரணன், தேவராஜன் போன்ற மலேசியச் சிறுகதை எழுத்தாளர்கள் எழுதிய முப்பது இளையோர் சிறுகதைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

**1.2 ஆய்வுப் பின்னணி**

சிறுகதை ஐரோப்பியர் வரவால் தமிழுக்குக் கிடைத்தது என்பது அறியத்தக்கது. ஐரோப்பாவில் ஏற்பட்ட தொழிற்புரட்சி, புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள், நடுத்தர வர்கத்தின் எழுச்சி ஆகியவை இலக்கிய வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்பத்தை உண்டாக்கியதால் சிறுகதை எனும் உரைநடையும் வளர்ச்சி கண்டது. கதைகள் கூறுவதும் கேட்பதும் மனித உணர்வுகளுடன் இரண்டறக் கலந்துவிட்ட நிலை பல நூற்றாண்டுகளாகப் பல மொழிகளில் இருந்தாலும் அது காலத்திற்குக் காலம் புதிய பரிணாமத்தைப் பெறும் என்பதைச் சிறுகதை மெய்ப்பிக்கிறது. குறுகிய மனித வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் அவனுடைய மனப் பக்குவத்திற்கேற்பக் கதை பூணும் இலக்கிய வடிவங்கள் மாறுவதுபோல, மிக நீண்ட மனித குல வரலாற்றிலும் சமுதாயச் சூழல்களுக்கு ஏற்பக் கதை பல வேறு வடிவங்களை எடுத்தே வருகின்றது. அத்தகைய வடிவங்களில் மிக அண்மைக் காலத்ததுதான் சிறுகதை (தண்டாயுதம், 1972).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சிறுகதைகள் சமுதாயத்தில் பலரும் விரும்பிப் படித்துப் பயன் பெறும் அளவில் எளிய இலக்கியங்களாய்த் திகழ்கின்றன. சிறுகதை ஒரு கதைமாந்தரின்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பண்புகளைக் கூறுவதாகவோ அல்லது வாழ்க்கையின் ஒரு சிக்கலை அழகாக அழுத்தமாக எடுத்துக்காட்டுவதாகவோ இருத்தல் அவசியமாகிறது. குறிப்பிட்ட ஓர் எல்லை வரையறைக்குள் சமுதாய வளர்ச்சிக்குத் தடைக்கற்களாக உள்ள ஊனங்களையும் அவற்றின் பரிணாம வளர்ச்சிகளையும் கலைநயத்தோடு வடித்துக் காட்டுவதே சிறுகதையின் முக்கியப் பணியாக விளங்குகிறது. இருப்பினும், அவலங்களை மட்டுமே படம் பிடித்துக் காட்டுவதோடு நின்று விடாமல் அவற்றுக்கான தீர்வுகளையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சுட்டிக்காட்டி வாசகர்களைச் சிந்திக்க வைப்பதும் சிறுகதையின் முக்கியப் பணியாகக் கொள்ளலாம். இதனையே தா.ஏ.ஞானமூர்த்தி (2011, p.347) “கருவே ஆசிரியரை நெறிப்படுத்துகிறது. உண்மையில் அது கதையின் செயல் நோக்கமாகும். கதை நிகழ்ச்சிகளின் வாயிலாகப் படிப்போருக்கு ஆசிரியரால் உணர்த்தப்பெறும் வாழ்க்கைப் படிப்பினை அல்லது பேருண்மையாகும்” என்று விளக்குகிறார். இலக்கியம் என்பது நிகழ்கால வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் வெறும் கண்ணாடி என்று கருதிய காலம் போய்விட்டது. வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் அதே நேரத்தில் அந்தக் காலக்கட்டத்தின் சிந்தனைகளை வளர்ப்பதும் அதன் கடமை என்று இன்று கருதப்படுகிறது (தண்டாயுதம், 1985). இதன் மூலம் ஒரு சமுதாயத்தைச் சிறுகதை போன்ற இலக்கியத்தின் மூலம் சிந்திக்க வைத்துச் செயலாற்ற வைக்க முடியும் என்பது தெளிவாகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆங்கிலேயரின் வருகைக்குப் பின்பு தமிழ் நாட்டில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய சிறுகதை பல தமிழறிஞர்களின் முயற்சியால் பெரும் வளர்ச்சியைப் பெற்றது. தமிழகத்தில் வேரூன்றிய சிறுகதை இலக்கியம்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மலேசியாவில் தமிழர்கள் 1930களில் குடியேறிய காலந்தொட்டு நிலைபெற்றது. இருப்பினும், சிறுகதை 1957இல் கிடைக்கப்பெற்ற சுதந்திரத்திற்குப் பிறகே மலேசியாவில் வளர்ச்சி காணத் தொடங்கியது எனலாம். அவ்வகையில் 18.08.1951 இல் தொடங்கப்பட்ட 'கதை வகுப்பு' சிறுகதை இலக்கியத்தின் திருப்புமுனையாக அமைந்தது. இதன் பின்னர் பல்வேறு உத்திகள், முயற்சிகள், ஆக்கப்பணிகள் சிறுகதை வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்டன (இராமையா,2008).

மலேசியச் சிறுகதை இலக்கியம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து பல காலக் கட்டங்களைக் கடந்து வந்துள்ளது. அவற்றைத் தொடக்க காலம்(1930 - 1941), ஜப்பானியர் காலம் (1942 - 1945), கதை வகுப்பு முடியும் காலம் (1946 - 1952), முற்சுதந்திர காலம் (1953 - 1957) பிற்சுதந்திர காலம் (1958 -1969), மறுமலர்ச்சிக் காலம் (1970 -1978) எனப் பிரிக்கலாம் (பாஸ்கரன், 1995).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மலேசியச் சிறுகதை எழுத்தாளர்களின் கருப்பொருள் காலத்திற்கேற்ப மாற்றம் கண்டுள்ளன. தொடக்கக் காலத்துச் சிறுகதைகள் பெரும்பாலும் தமிழ்நாட்டுச் சூழலில் எழுதப்பட்ட கதைகளாகவே இருந்தன. காதல், தொழிலாளர் துயரம், மதுவிலக்கு, சீர்திருத்தத் திருமணம், நாட்டுப்பற்று ஆகியவற்றைக் கருப்பொருளாகக் கொண்ட கதைகளே அதிகம் எழுதப்பட்டன. இருப்பினும், அவை சிறுகதைக்கான இலக்கணத்தைக் கொண்டிருக்காமல் நீதியை வலியுறுத்தும் கதைகளாகவே இருந்தன. சப்பானியர் காலத்தில் (1942-1945)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


சிறுகதைத் துறையின் வளர்ச்சியில் தொய்வுநிலை உண்டானாலும் இந்தியச் சுதந்திரத் தாகம், சாதி ஒழிப்பு, இந்தியர்களின் வாழ்க்கைமுறை ஆகிய கருப்பொருள்களைக் கொண்டு சிறுகதைகள் தொடர்ந்து வெளிவந்தன. 1946 முதல் 1957 வரையில் தமிழ் நேசன், தமிழ் முரசு, சங்கமணி போன்ற ஏடுகள் கொடுத்த ஊக்குவிப்பால் அதிகமான சிறுகதை எழுத்தாளர்கள், வறுமை, சந்தேகம், தியாகம், கடன் தொல்லை, கம்யூனிஸ்டுகளின் பயமுறுத்தல்கள், பயங்கரவாதிகளை ஒழித்தல் போன்ற மாறுபட்ட கருப்பொருள்களைக் கொண்டு எழுதத் தொடங்கினர் (இராமையா, 2008).

மலேசியச் சிறுகதைத்துறையின் மறுமலர்ச்சிக் காலமான 1969 முதல் 1979 வரையுள்ள காலகட்டத்தில் சிறுகதைகள் சமுதாயச் சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்னும் எண்ணம் எழுத்தாளர்களிடையே மேலோங்கி காணப்பட்டதால் சமகாலப் பிரச்சனைகளான குடியுரிமை, வேலையில்லாத் திண்டாட்டம், தமிழ்ப்பள்ளிகள், சமுதாயச் சீர்கேடுகள் ஆகியவை கருப்பொருளாக எழுந்தன (முரசுநெடுமாறன், 2007). 1980ஆம் ஆண்டுக்குப் பிறகு எழுதப்பட்ட சிறுகதைகள் கருப்பொருள்களிலும் உத்தி முறைகளிலும் புதிய பரிமாணத்தைப் பெற்றுள்ளன. மலேசிய மும்மொழி பண்பாட்டுச் சூழலில் சிறுகதைகள் பயணிக்கத் தொடங்கின. 1950களிலிருந்து இடைவிடாது பயணித்த தோட்டப்புற அவலங்களுக்கு விடைகொடுத்து சிறுகதைகள் சமகாலச் சிக்கல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கின. பெண்ணியச் சிந்தனை, சொந்தத் தொழில், அரசியல், முதியோர் பிரச்சனைகள், வன்முறைக் கலாச்சாரம்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கல்வி ஆகிய சமுதாயச் சிந்தனைகளைத் தூண்டும் கருப்பொருள்கள் சிறுகதைகளில் அதிகமாக எடுத்தாளப்படுகின்றன. எனினும், சிறுகதையைப் படிப்பவர்களுக்கு ஏதாவதொரு அறிவுரையைச் சொல்ல வேண்டும் என்ற தீவிரமான குறிக்கோள் சில வேளைகளில் சிறுகதைகள் அதன் கலை நயத்தை இழந்துவிடும் பாதிப்புக்கு இட்டுச் செல்கின்றது என்பது மறுப்பதற்கில்லை. சிறுகதையை மனிதர்களின் அனுபவப் பகிர்வுக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் போக்கு மலேசிய எழுத்தாளர்களிடையே இன்னும் நிலைபெற வேண்டியுள்ளது.

இதனிடையே, 'இளையோர் சிறுகதைகள்' மலேசிய எழுத்துலகிற்குப் புதிய வரவாகவே உள்ளன. மலாய், ஆங்கிலம் போன்ற பிற மொழிகளில் அதிகளவில் வெளிவரும் இளையோர் சிறுகதைகளை ஒப்பிடுகையில் தமிழில் இளையோர் சிறுகதைகள் குறைவாகவே உள்ளன. இளையோரை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட சிறுகதைகளுக்கு முன்னோடியாக விளங்குபவர் சு.கமலா ஆவார். பினாங்கு மாநிலத்தைச் சேர்ந்த இவர் 'உங்கள் குரல்' மாத இதழில் துணையாசிரியராகப் பணிபுரிந்த காலக்கட்டத்தில் 2005 முதல் இளையோரின் மனவுணர்வுகளையும் அவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களையும் கருப்பொருளாகக் கொண்டு சிறுகதைகளை எழுதியுள்ளார். தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கம் கொண்ட சக்தி அறவாரியம் மலாயாப் பல்கலைக்கழகப் பேராசிரியர் மு.இராசேந்திரனை இயக்குநராகக் கொண்ட நெஞ்சார்ந்த தமிழ்ப் பகிர்வுத் திட்டத்தின் கீழ் கமலாவின் இளையோர் சிறுகதைகள் தொகுப்பு நூலாக 2013இல் வெளியீடு கண்டது. இதுவே மலேசியத் தனிநபர் எழுத்தாளரின் முதல் படைப்பாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இதனைத் தவிர, மலேசிய எழுத்தாளர் சங்கமும் மலேசியத் தமிழ் இலக்கிய ஆசிரியர் கழகமும் இணைந்து நடத்திய சிறுவர், இளையோர் சிறுகதைகள் பரிசுப் போட்டியில் பல எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளை முன்வைத்தனர். மலேசியத் தேர்வு வாரியம் இளையோரைக் கதைநாயர்களாக வைத்து இலக்கியப் படைப்புகள் வர வேண்டும் என்று முடிவு செய்து அதனைப் பள்ளியில் அமலாக்கம் செய்த காலக்கட்டத்தில் இப்போட்டி நல்லதொரு திட்டமாக அரங்கேறியது. தேர்வு வாரியத்தின் முன்னாள் தமிழ்மொழி துணைஇயக்குநர் மூர்த்தியின் வழிக்காட்டுதலின் பேரில் சிறந்த பத்து இளையோர் சிறுகதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசளிக்கப்பட்டன. அதன் தொகுப்பு நூல், “சிறுவர், இளையோர் சிறுகதைகள்” என 2013இல் நூல் வடிவம் பெற்றது. இப்போட்டி ஆண்டுதோறும் நடைபெறும் வகையில் மலேசிய எழுத்தாளர் சங்கமும் மலேசியத் தமிழ் இலக்கிய ஆசிரியர் கழகமும் பெரும் முயற்சி செய்து வருகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**1.3 ஆய்வுச் சிக்கல்**

இன்றைய நகர வாழ்க்கையில் தொழில் ரீதியான குடும்பப் பிரிவுகளும், தனிக்குடும்ப வாழ்க்கை முறையும் உறவுகளின் நெருக்கமின்மையும் பொருளாதார ஏற்றத்தாழ்வும் இன்றைய இளையோரின் வாழ்வில் பெரும் மாற்றங்களை உருவாக்கியுள்ளன. கல்வி வாழ்வில் ஏற்படும் சிக்கல்களும் அவர்களின் வாழ்வில் பெரும் மனப்போராட்டத்தைக் கொண்டு வருகின்றது எனலாம். இதனால் இன்றைய இளையோர் பெரும் மன

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அழுத்தத்திற்கு ஆளாகின்றனர். மன அழுத்தம் இளையோரின் மன அமைதியை மட்டும் சீர்குலைக்காமல் அவர்களது உடல், உள நடத்தையையும் சீர்குலைக்கின்றது. இதன் காரணமாகவே இன்றைய இளையோர் பல தீயப் பழக்கங்களுக்கு அடிமையாகின்றனர். இதற்கு அடிப்படை காரணமாக இருப்பது அவர்களது உணர்வுகளை நாம் சரிவரப் புரிந்து கொள்ளாமல் இருப்பதுதான். அவர்களது மெய்ப்பாடுகளை நாம் சரிவரப் புரிந்து கொள்ளும் பொழுது இளையோரின் சிந்தனைத்திறன் ஆக்கப்பூர்வமாக மாறுவதுடன் தன்னை அறிதலும் பிறரது உணர்வுகளைப் புரிந்து கொண்டு செயல்படும் திறனும் அதிகரிக்கும்; மனஅழுத்தம் குறைந்த நல்ல குடிமகன்களாக வாழ்வர். மலேசிய இளையோர் எவ்வகையான உணர்வுகளுக்கு ஆளாகின்றனர், அவ்வாறு உணர்வுகளுக்கு ஆட்படும் போது அவர்களது மெய்ப்பாட்டின் நிலை என்ன என்பதை இன்றைய சமூகத்தாரால் எளிதாக உணர்ந்து கொள்ள முடிவதே இல்லை. மலேசியாவில் படைக்கப்படும் இளையோர்களுக்கான சிறுகதைகளில் இளையோரின் அன்றாட வாழ்வியல் சிக்கல்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இலக்கியங்கள் வாழும் மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் கண்ணாடி மட்டுமல்லாது மக்களின் மனத்தைப் பண்படுத்தும் திறன் கொண்டது. ஓர் இலக்கியத்தின் வெற்றிக்கு உணர்ச்சி, கற்பனை, வடிவம், கருத்து என்பன சிறந்து அமைதல் வேண்டும். எத்தன்மை கொண்ட உணர்வுகளை இளையோர் வெளிப்படுத்துகின்றனர் என்பதையும் அது நன்மையானதா அல்லது தீமையானதா என்பதை அறிந்து கொள்ள இயலாமல் இருப்பது ஆய்வுசிக்கலாகக் கொள்ளப்படுகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi